கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 31.10.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வனக்கல்லூரியில் 'நான் முதல்வன்' திட்டத்தின் திறன் மேம்பாடு பயிற்சி**

வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து நடத்தும் "பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டல்" தொடர்பான இருபது நாள் திறன் மேம்பாட்டு பயிற்சியின் துவக்க விழா 30.10.2025 அன்று ஓடந்துரை ஊராட்சி, ஊமப்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது.

இத்துவக்க விழாவில், சிறப்புரையாற்றிய வனக்கல்லூரியின் முதன்மையர் திரு. நிகார் ரஞ்சன், இ.வ.ப அவர்கள், பயிற்சியின் சிறப்பு மற்றும் பட்டு கூட்டினைக் கொண்டு பல்வேறு விதமான உயர் மதிப்புடைய கைவினை பொருட்கள் செய்வதின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக்கூறினார். தலைமையுரையாற்றிய, பட்டுபுழுவியல் துறை தலைவர் முனைவர்.கு.அ.முருகேஷ் மல்பெரி சாகுபடி மற்றும் மல்பெரி பழத்தினைக் கொண்டு மதிப்பு கூட்டும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விளக்கிக் கூறினார். வனக்கல்லூரியின் மூத்த பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.ஐ.சேகர், திறன் மேம்பாட்டு பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி வாழ்த்துரையாற்றினார். இப்பயிற்சியில் 26 படித்த வேலையில்லா கிராமபுற பெண்கள் ஆர்வமாக கலந்துகொண்டனர். இத்துவக்க விழாவில் வனக்கல்லூரியின் விஞ்ஞானிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயிற்சியில், மல்பெரி சாகுபடி, மல்பெரி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, மல்பெரி தண்டு அறுவடை, பட்டுப்புழு வளர்ப்புமனை நோய் நீக்கம், பட்டுப்புழு வளர்ப்பில் ஊசிஈ மேலாண்மை, மல்பெரி பழங்களிலிருந்து உயர் மதிப்பூட்டிய உணவுப் பொருட்கள் தயாரித்தல், எஞ்சிய பட்டுக்கூடுகளிலிருந்து, பூங்க்கொத்து, திருமண மாலை,

அணிகலன்கள், மற்றும் மலர்க்குவளைகள் உற்பத்தி செய்தல் குறித்த செயல்முறைவிளக்கத்துடன் தொழில்நுட்ப உரைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பயனாளிகளின் செயல்பாட்டுதிறனை அதிகரிக்கும் பொருட்டு கண்டுணர்வு சுற்றுலா மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலா்**